ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 3.7 – கள்வன்கொல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.7 – கள்வன்கொல்

‡ கள்வன் கொல் யான் அறியேன் ⋆
கரியான் ஒரு காளை வந்து ⋆
வள்ளி மருங்குல் என்தன் ⋆
மட மானினைப் போத என்று ⋆
வெள்ளி வளைக் கைப் பற்றப் ⋆
பெற்ற தாயரை விட்டகன்று ⋆
அள்ளலம் பூங்கழனி ⋆
அணி ஆலி புகுவர் கொலோ ! ‖ **3.7.1** ‖

பண்டிவன் ஆயன் நங்காய் ! ⋆
படிறன் புகுந்து ⋆
என் மகள் தன் தொண்டையம் செம் கனிவாய் ⋆
நுகர்ந்தானை உகந்து ⋆
அவன் பின் கெண்டை ஒண் கண் மிளிரக் ⋆
கிளி போல் மிழற்றி நடந்து ⋆
வண்டமர் கானல் மல்கும் ⋆
வயல் ஆலி புகுவர் கொலோ ‖ **3.7.2** ‖

அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய் ! ⋆
அரக்கர் குலப் பாவை தன்னை ⋆
வெஞ்சின மூக்கரிந்த ⋆
விறலோன் திறம் கேட்கில் மெய்யே ⋆
பஞ்சிய மெல்லடி ⋆

எம் பணைத் தோளி பரக்கழிந்து ⋆
வஞ்சியந் தண் பணை சூழ் ⋆
வயல் ஆலி புகுவர் கொலோ ॥ **3.7.3** ॥

ஏதவன் தொல் பிறப்பு ⋆
இளையவன் வளை ஊதி ⋆
மன்னர் தூதுவன் ஆயவன் ஊர் ⋆
சொலுவீர்கள் ! சொலீர் அறியேன் ⋆
மாதவன் தன் துணையா நடந்தாள் ⋆
தடம் சூழ் புறவில் ⋆
போது வண்டாடு செம்மல் ⋆
புனல் ஆலி புகுவர் கொலோ ॥ **3.7.4** ॥

தாய் எனை என்றிரங்காள் ⋆
தடந்தோளி தனக்கமைந்த ⋆
மாயனை மாதவனை ⋆
மதித்தென்னை அகன்ற இவள் ⋆
வேய் அன தோள் விசிறிப் ⋆
பெடை அன்னம் என நடந்து ⋆
போயின பூங்கொடியாள் ⋆
புனல் ஆலி புகுவர் கொலோ ॥ **3.7.5** ॥

‡ என் துணை என்றெடுத்தேற்கு ⋆
இறையேனும் இரங்கிற்றிலள் ⋆
தன் துணையாய என்தன் ⋆
தனிமைக்கும் இரங்கிற்றிலள் ⋆
வன் துணை வானவர்க்காய் ⋆
வரம் செற்றரங்கத்துறையும் ⋆

இன் துணைவனொடும் போய் ⋆
எழில் ஆலி புகுவர் கொலோ ‖ **3.7.6** ‖

அன்னையும் அத்தனும் என்று ⋆
அடியோமுக்கிரங்கிற்றிலள் ⋆
பின்னை தன் காதலன் தன் ⋆
பெருந்தோள் நலம் பேணினளால் ⋆
மின்னையும் வஞ்சியையும் ⋆
வென்றிலங்கும் இடையாள் நடந்து ⋆
புன்னையும் அன்னமும் சூழ் ⋆
புனல் ஆலி புகுவர் கொலோ ! ‖ **3.7.7** ‖

முற்றிலும் பைங்கிளியும் ⋆
பந்தும் ஊசலும் பேசுகின்ற ⋆
சிற்றில் மென் பூவையும் விட்டகன்ற ⋆
செழுங்கோதை தன்னை ⋆
பெற்றிலேன் முற்றிழையைப் ⋆
பிறப்பிலி பின்னே நடந்து ⋆
மற்றெல்லாம் கை தொழப் போய் ⋆
வயல் ஆலி புகுவர் கொலோ ‖ **3.7.8** ‖

காவியம் கண்ணி எண்ணில் ⋆
கடி மா மலர்ப் பாவை ஒப்பாள் ⋆
பாவியேன் பெற்றமையால் ⋆
பணைத் தோளி பரக்கழிந்து ⋆
தூவி சேர் அன்னம் அன்ன நடையாள் ⋆
நெடுமாலொடும் போய் ⋆

வாவியந் தண் பணை சூழ் ⋆
வயல் ஆலி புகுவர் கொலோ ‖ **3.7.9** ‖

‡ தாய் மனம் நின்றிரங்கத் ⋆
தனியே நெடுமால் துணையா ⋆
போயின பூங்கொடியாள் ⋆
புனல் ஆலி புகுவர் என்று ⋆
காய் சின வேல் கலியன் ⋆
ஒலி செய் தமிழ் மாலை பத்தும் ⋆
மேவிய நெஞ்சுடையார் ⋆
தஞ்சம் ஆவது விண்ணுலகே ‖ **3.7.10** ‖

அடிவரவு — கள்வன் பண்டு அஞ்சுவன் ஏதவன் தாய் என்துணை அன்னையும் முற்றிலும் காவி தாய்மனம் நந்தா

கள்வன்கொல் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்